# நிர்வாண சடகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



ப்ரக்ஞன்

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | நிர்வாண சடகம் |
| **விளக்க உரை** | : | **ப்ரக்ருன்** |
| **வகை** | : | தன்னாட்டம் |
| **முதற்பதிப்பு** | : | 2019 |
| **வெளியீடு** | : | பராபரம் - கோவை. |
| **பக்கங்கள்** | : | 16 |
| **விலை** | : | அக விழிப்பு |


| | | |
|---|---|---|
| **பதிப்பாளர்** | : | **ஓம் கிராபிக்ஸ்** |
| | | **கோயமுத்தூர்.** |

# நிர்வாண சடகம்

**(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)**

விளக்க உரை

## ப்ரக்ஞன்

# நிர்வாண சடகம்

## முன்னுரை

**சடகம்** என்றால் **ஆறு** என்று பொருள். இது ஆறு ஸ்லோகங்கள் கொண்டது.

இந்தத் உடல் நானல்ல, எனது புலன்கள் நானல்ல என்று நாம் பார்த்து அனுபவிக்கும் அனைத்து உபாதிகளையும் வேதாந்த வாக்கின்படி நீக்கிவிட்டு, **"இதுவல்ல, அதுவல்ல"** என்று கூறி, இறுதியில் எஞ்சியுள்ள ஜீவான்மாவும், பரமான்மாவும் ஒன்றே என்று கூறும், வேத மகா வாக்கியங்களின் உண்மையை ஆராய்ந்து, மிக அழகாக எழுதப்பட்ட இந்த ஆறு ஸ்லோகங்கள் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரரால் அருளப்பட்டது.

கயிற்றை பாம்பு என்று பார்த்துக் கொண்டிருக்கும்வரை அந்தப் பிரமை நம்மை விட்டு அகலாது. பார்க்கப்படுவது என்ன? என்று முதலில் தோன்ற வேண்டும். அதன் உண்மையை அறிய, அதற்குத் தேவையான ஒளியும் அங்கு இருந்தாக வேண்டும். அந்த ஒளியும், அந்த பொருளின்மீது சரியான கோணத்தில் விழ

வேண்டும். அப்போதுதான் ஒருவனுக்கு அதன் உண்மை என்ன? என்பதே தெரிய வரும்.

அதுப்போன்று, இங்கு முதலில் **அழியும் - அழியாத** பொருட்களின் தன்மைகளை ஒருவன் அறியவேண்டும். உடல், மனம், புத்தி இவைகள் எல்லாம் ஒருநாள் அழியக்கூடியன என்பதை, நாம் நம் நடைமுறை வாழ்க்கையில் பல்வேறு மரணங்களின் வாயிலாக அறிகிறோம்.

அவ்வாறு, அவைகள் அழிவதினாலேயே, **"நான்"** இல்லாது போய்விடுவேனா?, அப்படிப் பார்த்தால், இந்த உடலும், புலன்களும், புத்தியும் வருவதற்கு முன்பே '**நான்**' இருந்து இருக்க வேண்டும் அல்லவா? அப்போதுதானே, இந்த பரு உடலில் நான் வந்திருக்க முடியும். ஆகவே, என்றும் அழியாதவனாகிய **"நான்"** அழிந்து போகக்கூடிய இந்த பரு உடலில் வந்து, போவதினால், இந்த உடலை **'நான்'** என்று அபிமானித்துக் கொள்கிறேன் என்பதை எப்போது அறிவது?

அரிதான இந்த மானுடப்பிறவி தன்னை அறிந்து, தன்மயமாக மட்டுமே கிடைத்துள்ளது என்பதை எப்போது அறிய முடியும்?

அது, எந்த சீவராசிகளுக்கும் கிடைக்காத, நன்மை, தீமைகளைப் பகுத்தறியக்கூடிய, பிரத்யேக மனம் படைத்த மனிதப் பிறவியில் மட்டுமே, மனதின் மேம்பட்ட புத்தி சக்தியைக் கொண்டு, பரம[**தன்**]**னை** அறிவது சாத்தியமாகும்.

அத்கிலே, எது நித்தியமோ அதை மட்டும் பற்றிக்கொண்டு, அநித்தியமானவைகளை அகற்றுவதில், முதல் படியாக இந்த உடல் பற்றிய உண்மைகளை அறிகின்றோம்.

அதாவது, நம்மை யாராவது சுட்டிக் காட்டும்போதோ, அல்லது ஆழ்ந்த தூக்கத்தின் பின்போ நாம் முதலில் காண்பதும், உணர்வதும் நமது ஸ்தூல உடலைத்தான். அதற்கே பிறப்பு, வளர்ச்சி, இறப்பு முதலான பருவங்கள் இருக்கின்றன.

அதுப்போலவே, இந்த பரு உடலாகிய ஸ்தூல உடலைத் தாண்டிய பல்வேறு சூக்கும உடல்களை கனவில் நாமே படைத்துக் கொள்கிறோம். நமது கனவில் நாம் உருவாக்கும் ஒவ்வொரு சூக்கும உடலுக்கும், அதன் பயன்படுகளுக்கும் நம்முடைய மனமே காரணம் ஆகின்றது.

எப்படி?

இருப்பது என்னவோ நான் மட்டுமே, ஆனால், என்னாலேயே எல்லாவற்றையும் இந்த கனவில் சூக்கும உடலாக படைத்துக் கொண்டு, அதை அறிதல், அறியபப்படுவது, அறிவு ஆகிய மூன்று நிலைகளில் நாமே உள்ளோம்.

அடுத்து, நம்முடைய ஆழ்ந்த உறக்கத்தில், இந்த மனமும், பரு உடலும் நமக்கு அனுபவம் ஆவதில்லை. அந்த நிலையிலே, நம்முடைய மனம் அதன் பிறப்பிடமான காரண உடலில் சென்று ஒடுங்கி விருகின்றது.

அதாவது, இந்த பரு உடலும், மனோ உடலும் உண்டாவதற்குக் காரணமான, காரண உடலைப் பற்றி நாம் அறியா விட்டாலும், நமது அனுபவத்தின் படி அதுவும் உள்ளது.

அதாவது தூல மற்றும் சூக்ஷம உடல்கள் அந்தக் காரண உடலில் தினந்தோறும் அடங்கி, பின் எழுகிறது. அப்படி அடங்க முடியாது போனால், சில நாட்களுக்குள்ளேயே இந்த பரு உடலாகிய தூல உடலும் காணாது மறைந்து விடும் என்பதை நாம் நன்கு அறிவோம்.

ஆக இவைகள் எல்லாவற்றிற்குமே ஒரு தொடக்கமும், வளர்ச்சியும், முடிவும் இருப்பது நன்கு தெரிகிறது.

இவைகள் அனைத்திற்கும் மூல காரணமாக இருப்பதும், இவ்வாறு, தோன்றி, மறையும் இவைகள் அனைத்தையும் சாட்சியாகப் பார்த்துக்கொண்டிருக்கும் "**நான்**" இவைகளுக்கு வேறாக எப்போதும் இருக்கின்றவன்.

உண்மையில், "**நான்**" வருவதும் இல்லை, போவதும் இல்லை. வந்து போகின்றவைகள் எல்லாமே அழியக்கூடிய இந்த மூன்று உடல்களாகிய **காரண, சூக்கும, ஸ்தூல** நிலையில் இருக்கின்ற உடல்களே ஆகும்.

நமது உடல் நமக்குத் தெரிந்த பின்தான் உலகமே நமக்குத் தெரிய வருகிறது. அந்த உலகத்தை நாம் நமது சூக்ஷ்ம ஐம்புலன்களால் அறிகிறோம். ஐம்புலன்களும் செயல்பட அதனதற்கு வேண்டிய தூலக் கருவிகளும் நம்மிடம் இருக்கின்றன. அவைகளும் நமது உடலின் அங்கங்களே.

உடலே நாம் அல்ல என்கிறபோது அந்தக் கருவிகளோ, அல்லது அவைகளை இயக்கும் நுண்புலன்களோ நாமாக எப்படி இருக்க முடியும்? அதனால், அவைகளும் நாம் அல்ல. அப்படியென்றால், உன்மையில் இந்த **'நான்'** என்று கிளம்புகின்றவன் யார்? இந்த **நான்** எங்கு இருக்கிறான்?

இதை ஆராய்ந்து, உணர்ந்துக் கொண்ட உள்ளத்தில், தன்னில் தானாக ஒளிர்ந்து கொண்டிருக்கும் சிவனே **"நான்"** என்பதை **பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர்** இந்த ஆறு பாடல்களின் வாயிலாக அருளுகின்றார்.



# நிர்வாண சடகம்

**ஸ்லோகம் 1.**

**மனோ புத்தி அஹங்கார சித்தாநி னாஹம்,**

**ந ச ச்ரோத்ர ஜிஹ்வே ந ச க்ராண நேத்ரே,**

**ந ச வ்யோம பூமிர் ந தேஜோ ந வாயு:**

**சிதானந்த ரூபம் சிவோஹம் சிவோஹம்**

mano buddhi ahankara chittani naaham
na cha shrotravjihve na cha ghraana netre
na cha vyoma bhumir na tejo na vaayuhu
chidananda rupah shivo'ham shivo'ham

**விளக்கம்:-**

**நான் மனம் அல்ல. புத்தியும் அல்ல.**
**சித்தமும் அல்ல. நான் காதுகளும் அல்ல. நாக்கும் அல்ல.**
**மூக்கும் அல்ல. கண்களும் அல்ல.**
**வானமும் அல்ல. பூமியும் அல்ல.**
**அக்னியும் அல்ல. காற்றும் அல்ல.**
**சித்தமெல்லாம் சிவமான சிவானந்த ஸ்வரூபம்.**

**அந்த சிவமே நான், சிவமே நான்.**

**ஸ்லோகம் 2.**

ந ச ப்ராண சங்க்யோ ந வை பஞ்ச வாயு:
ந வாக் சப்த தாதுர் ந வா பஞ்ச கோச:
ந வாக் பாணி பாதம் ந சோபஸ்த பாயு:
சிதானந்த ரூபம் சிவோஹம் சிவோஹம்

na cha prana sangyo na vai pancha vayuhu
na va sapta dhatur na va pancha koshah
na vak pani-padam na chopastha payu
chidananda rupah shivo'ham shivo'ham

**விளக்கம்:-**

நான் பிராணனும் அல்ல. பஞ்ச வாயுக்களும் அல்ல.
ஏழு தாதுக்களும் அல்ல. பஞ்ச கோஷங்களும் அல்ல.
பேச்சும் அல்ல. கைகால்களும் அல்ல.
செயல்படுகின்ற புலன்களும் அல்ல.
சித்தமெல்லாம் சிவமான சிவானந்த ஸ்வரூபம்.

அந்த **சிவமே நான், சிவமே நான்.**

**ஸ்லோகம் 3.**

ந மே த்வேஷ ராகௌ ந மே லோப மோஹௌ,

மதோ நைவ மே நைவ மாத்ஸர்ய பாவ:

ந தர்மோ ந சார்த்தோ ந காமோ ந மோக்ஷ:

சிதானந்த ரூபம் சிவோஹம் சிவோஹம்

na me dvesha ragau na me lobha mohau
mado naiva me naiva matsarya bhavaha
na dharmo na chartho na kamo na mokshaha
chidananda rupah shivo'ham shivo'ham

**விளக்கம்:-**

**எனக்கு வெறுப்பும் இல்லை. விருப்பமும் இல்லை.
பேராசையும் இல்லை. மோகமும் இல்லை.
கர்வமும் இல்லை. பொறாமையும் இல்லை.
அறம் பொருள் இன்பம் வீடு என்று எதுவுமில்லை.
சித்தமெல்லாம் சிவமான சிவானந்த ஸ்வரூபம்**

அந்த **சிவமே நான், சிவமே நான்.**

**ஸ்லோகம் 4.**

**ந புண்யம் ந பாபம் ந ஸௌக்யம் ந துக்கம்**
**ந மந்த்ரோ ந தீர்த்தம் ந வேதா ந யக்ஞ:**
**அஹம் போஜனம் நைவ போஜ்யம் ந போக்தா**
**சிதானந்த ரூபம் சிவோஹம் சிவோஹம்!**

na punyam na papam na saukhyam na duhkham
na mantro na tirtham na veda na yajnah
aham bhojanam naiva bhojyam na bhokta
chidananda rupah shivo'ham shivo'ham

**விளக்கம்:-**

**எனக்குப் புண்யமும் இல்லை. பாவமும் இல்லை.**
**ஸௌக்யமும் இல்லை. துக்கமும் இல்லை.**
**மந்திரங்களும் இல்லை. தீர்த்த ஸ்தலங்களும் இல்லை.**
**மறைகளும் வேள்விகளும் கூட எனக்கு இல்லை.**
**நான் உணவும் அல்ல. உண்பவனும் அல்ல.**
**உண்ணப்படுபவனும் அல்ல.**
**சித்தமெல்லாம் சிவமான சிவானந்த ஸ்வரூபம்.**

**அந்த சிவமே நான், சிவமே நான்.**

**<u>ஸ்லோகம் 5.</u>**

**ந ம்ருத்யுர் ந சங்கா ந மே ஜாதி பேத:**

**பிதா நைவ மே நைவ மாதா ந ஜன்மா**

**ந பந்துர் ந மித்ரம் குருர் நைவ சிஷ்யா:**

**சிதானந்த ரூபம் சிவோஹம் சிவோஹம்**

na mrtyu na shanka na me jati bhedaha
pita naiva me naiva mataa na janmaha
na bandhur na mitram gurur naiva shishyaha
chidananda rupah shivo'ham shivo'ham

**<u>விளக்கம்:-</u>**

**எனக்கு மரணமும் இல்லை. மரண பயமும் இல்லை.**
**ஜாதியும் இல்லை. ஜாதி பேதமுமில்லை.**
**தந்தையும் இல்லை. தாயும் இல்லை.**
**இவர்களால் எனக்கு ஜன்மமும் இல்லை.**
**உற்றமும் இல்லை. சுற்றமும் இல்லை.**
**குரு சிஷ்யன் என்று யாரும் இல்லை.**
**சித்தமெல்லாம் சிவமான சிவானந்த ஸ்வரூபம்.**

**அந்த சிவமே நான், சிவமே நான்.**

## ஸ்லோகம் 6.

அஹம் நிர்விகல்போ நிராகார ரூபோ
விபுத் வாச்ஸ சர்வத்ர சர்வேந்த்ரியானாம்
ந சாசங்கதம் நைவ முக்திர்ந மேயா
சிதானந்த ரூபம் சிவோஹம் சிவோஹம்

aham nirvikalpo nirakara rupo
vibhut vatcha sarvatra sarvendriyanam
na chasangatham naiva muktir na meyaha
chidananda rupah shivo'ham shivo'ham

## விளக்கம்:-

**நான் குணபேதம் இல்லாதவன். எந்த ரூபமும் இல்லாதவன்.**
**எங்கெங்கும் எப்போதும் எல்லா புலன்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றவன்.**
**எனக்கு பந்தமும் இல்லை. முக்தியும் இல்லை..**
**நான் அளக்க முடியாதவன்.**
**சித்தமெல்லாம் சிவமான சிவானந்த ஸ்வரூபம்.**

அந்த **சிவமே நான், சிவமே நான்.**

**ஓம் தத் சத்!**

# நிர்வாண சடகம்



ஸ்ரீ ஆதிசங்கரர்